# சங்ககால நீர் மேலாண்மை – ஐங்குறுநூற்றுப் பாடல்களை முன்வைத்து

*முனைவர் தா.ரா. ராமலட்சுமி*
உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
https://doi.org/10.5281/zenodo.15323797

**ஆய்வுச் சுருக்கம்**

*நீர் மேலாண்மை என்பது நீரைச் சேகரித்தல், சேமித்தல், முறையாகப் பயன்படுத்துதல், கழிவை அகற்றுதல் முதலானவையாகும். மேலும் முறையான நீர் வளங்களான நீர்நிலைகளைப் பாதுகாத்தல், மழையைப் பெருக்குதல், நீரினால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைத்தல் முதலானவையும் நீர் மேலாண்மையில் அடங்கும். இந்த வகையில் முற்காலத் தமிழர்களும் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர் என்பதைப் பல்வேறு இலக்கியங்களும் தொல்லியல் ஆய்வுகளும் சான்று பகர்கின்றன. காலம் கடந்து நிற்கும் கரிகாலனின் கல்லணையே தமிழனின் நீர் மேலாண்மைக்கு மிகச்சிறந்த சான்றாகத் திகழ்கிறது. சங்க இலக்கியங்களுள் அதிக எண்ணிக்கையிலான பாடல்களைக் கொண்ட ஐங்குறுநூற்றிலும் தமிழர்களின் நீர் மேலாண்மைக்கான பல பதிவுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:*** *நீர் மேலாண்மை, தூம்பு, கற்சிறை, குளம்*

## முன்னுரை

*நீரால் சூழப்பட்டுள்ள இவ்வுலகில் உயிரினங்கள் செழிப்புற்று வாழ்வதற்குப் பல்வேறு பொருட்கள் இன்றியமையாதன. அவற்றுள் நீரின் பங்கு முதன்மையானது. மண்ணுயிர்கள் செழித்து வாழ ஆதாரமாக இருக்கக்கூடியது நீர். நீரை வீணாக்காது முறையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துதே நீர் மேலாண்மை ஆகும். நீர் வளத்தைத் தொடர்ந்து பெறுவதற்கு நீர் மேலாண்மை அவசியம் ஆகும். அத்தகைய நீர் மேலாண்மைக்கான வழிமுறைகள் சிலவற்றை ப.மு. நடராஜன் குறிப்பிட்டுள்ளார். அவையாவன,*

1. *மழைநீர் சேகரிப்பு*
2. *செயற்கை நில நீர்ச் செறிவு*
3. *கழிவுநீரை நன்னீராக்கிப் பயன்படுத்துதல்*
4. *நுண் பாசன முறை*
5. *புஞ்சைப் பயிர் விவசாயம்*
6. *உவர் நீர் மேலும் கடல் நீரை நன்னீராக்கிப் பயன்படுத்துதல்*
7. *நதிகளின் நீரைப்பகிர்ந்து வாழ்தல்.*

*என்பனவாகும் (ப-8, நீர் மேலாண்மை).*

## மழைவளம்

*நீருக்கு முதன்மை ஆதாரமாக இருப்பது மழையே ஆகும். "சிறு துளிப் பெருவெள்ளம்" என்பது போல் துளித்துளியாக விழுந்த மழைத்துளி ஓடையாகி ஆறாகப் பெருகிக் கடலில் கலக்கிறது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் இந்த மழைநீரானது ஓடைகள், ஆறுகள், குளம், குட்டைகள், ஏரிகள், அணைக்கட்டுகள், கணவாய் எனப் பல்வேறு இடங்களிலும் தேங்கியும் கடந்தும் வருகின்றது. இவ்வாறு விழுந்த மழைநீரானது பல்லுயிரும் செழித்து வளர அவசியமாகிறது. "பெய்தும் கெடுக்கும் பெய்யாமலும் கெடுக்கும் மழை" என்பது பழமொழி. இப்பழமொழிக்கேற்ப சில காலங்களில் மழை அதிகமாகப் பொழிந்து ஊரையே அழித்துவிடும்; பலரது வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகி இல்லாமலே போய்விடும். சில காலங்களில் மழை பெய்யாது பொய்த்து நாட்டையே பசி பஞ்சக்காடாக மாற்றி விடும். அத்தகைய ஆற்றல் மழைக்கு உண்டு. எனவே*

பெய்யும் மழை நீரை வீணாகக் கடலில் கலக்காதவாறு மக்களுக்குப் பயன்படுத்தும் விதத்தில் மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது.

***நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்***
***வான் இன்று அமையாது ஒழுக்கு (குறள். 20)***

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க இவ்வுலக மனிதர்களின் வளமான வாழ்வுக்கு நீர் முதன்மை ஆதாரமாகத் திகழ்கிறது. எனவே பெய்த மழையை மக்கள் வாழ்த்தினர் என்று ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. இதனை,

***வாழியாதன் வாழி அவினி***
***மாரி வாய்க்க வளம் நனி சிறக்க (ஐங்.10.1-2)***

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களும் செழித்து வாழ்வதற்கும் உலக வாழ்வுக்கு இன்றியமையாத பல செல்வங்கள் செழித்து விளங்குவதற்கும் ஆதாரம் மழையே ஆகும். எனவே மழை வளம் செழித்து விளங்க வேண்டும் என்றும், மழை வளம் செழித்து இருந்தால் தான் மற்ற செல்வங்களும் செழித்து இருக்கும். எனவே மழை வளம் செழித்து விளங்க வேண்டும்; மழை பொழிய வேண்டும் என்று பண்டை மக்கள் மழையை வாழ்த்தினர் என்பதாக இந்தப் பாடல் அமைகிறது.

## நீர்நிலைகள்

நீர்நிலைகளை,

1. இயற்கையான நீர்நிலைகள்
2. செயற்கையான நீர்நிலைகள்

என இரண்டாகப் பகுக்கலாம். ஒரு நல்ல அரசானது தன் ஆட்சியின் கீழ் உள்ள குடிமக்களின் நல்வாழ்வுக்காக நீர் வளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி வரும். அந்த வகையில் குளம் வெட்டுதல், பராமரித்தல், அணைக் கட்டுதல் எனப் பல்வேறு செயல்களை நாட்டு மக்களின் நலன் கருதி செய்வதே சிறந்த அரசாக இருக்கும். எனவே மனித வளத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி செயற்கையான நீர் நிலையை உருவாக்குகின்றனர். அது போல இயற்கையாக அமைந்த நீர் நிலைகளும் உண்டு.

## பொய்கை

"பாய்கை" என்பது இயற்கையாக அமைந்த நீர் நிலையாகும். இது குளம் போன்று நீர் நிறைந்து காணப்படும். நீர் நிறைந்து காணப்படுவதால் பல்வேறு வகையான மலர்களும் பூத்துக் காணப்படும். இவ்வாறு நீர்நிலைகளில் பூக்கள் பூத்துக் காணப்படுவது அந்த நாடு வளமுடைய நாடு என்பதைக் குறிப்பதாகும்.

***தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையோடு***
***வெண் பூம் பொய்கைத்து அவன் ஊர் என்ப***
***(ஐங்.41.1-2)***

***அம்ம வாழி தோழி நம் ஊர்ப்***
***பொய்கைப் பூத்த புழைக் கால் ஆம்பல்***
***(ஐங். 34.1-2)***

எனவரும் பாடல் அடிகள் மருத நிலத்தில் உள்ள பொய்கையில் பூக்கள் பூத்திருந்தன என்று குறிப்பிடுகிறது. அவ்வாறு பூக்கள் பூத்துக் காணப்படுவது அந்த ஊரின் வளம் சிறந்து காணப்படுவதை விளக்குகின்றன.

## குளம்

"குளம்" என்பது ஒரு செயற்கை நீர்நிலையாகும். இது மழைநீரைச் சேமித்து வைக்கும் தொழில்நுட்பமாகும். பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஒரு பெரிய நிலப்பரப்பில் வெட்டப்பட்டு மழை நீரைச் சேகரித்து வைப்பர். இதனை இலக்கியங்கள் "குளம்" என்றும் "கயம்" என்றும் குறிப்பிடுகின்றன.

***குளந்தொட்டுக் கோடு பதித்து வழி சீத்து***
***உளந்தொட்டு உழுவய லாக்கி (சி.ப.மூ.65:1-3)***

என்று சிறுபஞ்சமூலப் பாடலும் நாடும் நாட்டு மக்களும் செழித்து விளங்கவும் உழவுத் தொழில் செழித்து விளங்கவும் நீரைத் தேக்கி வைக்கக் குளத்தை வெட்ட வேண்டியது அவசியம் என்பதைக் குறிப்பிடுகிறது.

***நாறு வீ ஐம்பால் மகளிர் ஆடும்***
***தைஇத் தண் கயம் போல (ஐங்.84.3-4)***

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகளின் வழிபொதுமக்கள் பலரும் நீராடுவதற்காக

*ஊரின் மத்தியில் குளம் அமைத்திருந்தனர் என்றும் அங்கே மகளிர் பலரும் சேர்ந்து நீராடி மகிழ்ந்திருந்தனர் என்பதும் அறியலாகிறது.*

**அணைக்கட்டுகள்**

*"அணைக்கட்டுகள்" என்பதும் செயற்கையாக நீர் சேமித்து வைக்கும் தொழில்நுட்பமாகும். மழைக்காலங்களில் அதிகமாக மழை பொழியும் போது ஆறு பெருக்கெடுத்து ஓடும். அவ்வாறு ஓடும் ஆற்று நீரை அணைக்கட்டுகளில் தேக்கி வைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்துவர். இந்த அணைக்கட்டுகளை "கற்சிறை" என்று இலக்கியங்கள் புகல்கின்றன.*

***வருவிசை புனலை கற்சிறை போல***
***ஒருவன் தாங்கிய பெருமையானும் (தொல்.65)***

*என்ற நூற்பாவில் "கற்சிறை" என்பது ஓடும் நீரைத் தடுத்து வைக்கும் அணை என்று குறிப்பிடுகிறது தொல்காப்பியம்.*

***சிறையளி புதுப் புனல் பாய்ந்தெனக் கலங்கிக்***
***கழனித் தாமரை மலரும்***
***பழன ஊர (ஐங்.53.2-4)***

*என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகளில் மழை பொழிந்து வந்த புது வெள்ளம் அணையை மீறி வந்தது எனக் குறிப்பிடுகிறது. இங்கு வெள்ள நீரைக் கட்டுப்படுத்தித் தேக்கி வைக்க அணைகள் கட்டியிருந்த தொழில்நுட்பத்தை இப்பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன.*

**தூம்பு - தொழில் நுட்பம்**

*தூம்பு என்பது உட்டுளை என்று இலக்கியங்கள் பொருள் உரைக்கின்றன. தூம்பு - இது நீண்ட குழாய் போன்ற அமைப்புடையது. தூம்பு - சிறிய துளை. தும்பு + கை =தும்பிக்கை; யானையின் தும்பிக்கை சிறிய துவாரத்துடன் கூடியது. தும்பிக்கை போன்ற அமைப்புடைய தூம்பு குளத்தில் உள்ள நீர் கரையின் அடிப்பகுதி வழியாக வெளியே செல்ல உதவுகின்றது. சங்க இலக்கியங்கள் "சுருங்கை" என்னும் சொல்லால் தூம்பைக் குறிக்கின்றன. மூங்கில், பனை ஆகிய மரங்களால் உருவாக்கப்படும் தூம்புகள் உள்ளன. இவற்றை சில ஆண்டுகளுக்கு ஒரு முறை அகற்றிவிட்டு புதிய தூம்புகளைப் பயன்படுத்துவர். இத்தகைய தூம்பு தொழில்நுட்பத்தினை,*

***அன்னை வாழி வேண்டு அன்னை -நெய்தல்***
***நீர் படர்தூம்பின் பூக்கெழு துறைவன்***
***(ஐங்.161.1-2)***

*என்று ஐங்குறுநூற்றுப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.*

**முடிவுரை**

*சங்ககாலத்தில் பல்வேறு தொழில்நுட்பங்களின் மூலமாக நீர் மேலாண்மையைப் பயன்படுத்தி நீரை சிக்கனப்படுத்திப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் நீர் மேலாண்மை என்பது நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டு, அவற்றின் பொருள் மற்றும் சீரமைப்பைப் புரிந்துகொண்டு இயற்கையைப் பாதுகாப்பதாக இருக்கும். நீர் வளங்களின் சீரான பராமரிப்பு, எதிர்கால தலைமுறைகளுக்கான பாதுகாப்பையும் உறுதி செய்யும்.*

**துணை நூற் பட்டியல்**


1. *கணேசய்யர். 2007. தொல்காப்பியம் - நச்சினார்க்கினியர் உரை, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*
2. *நடராசன். ப.மு. 2014. நீர் மேலாண்மை, சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
3. *தட்சிணாமூர்த்தி அ. 2011. ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.*
4. *பரிமேலழகர் (உரை), 1970. திருக்குறள் மூலமும் உரையும், சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*
5. *புன்னை வனநாத முதலியார் பு.சி. 1936. சிறுபஞ்சமூலம் (உரை), சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்*